


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற பணிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 188 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகள், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 102 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் 19 முடிவுற்ற பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 77 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் 14 முடிவுற்ற பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 60 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற கூட்டு குடிநீர் திட்டங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகள், நகராட்சி நிருவாகத் துறை சார்பில் 15 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்ட பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 18 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் 5,364 மீட்டர் உயரத்திற்கு மலையேற்றம் மேற்கொண்டு அடிவார முகாமை அடைந்த (Everest base camp) திருநெல்வேலியைச் சேர்ந்த பள்ளி மாணவி லலித் ரேணு ஸ்ரீதர் வெங்கடேஷ் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் மாணவியின் பெற்றோர் உடன் உள்ளனர்.




மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வழக்கறிஞர் பி. வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களை நேற்று (29.05.2025 – வியாழக்கிழமை) சென்னை காயிதே மில்லத் மன்ஜிலில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மாநில பொதுச்செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாநில துணைத்தலைவர் கே.டி. கிஸர் முஹம்மது, மாநில தலைமை நிலைய செயலாளர் கே.எம். நிஜாமுதீன், மாநில துணைச்செயலாளர் எஸ்.ஏ இப்ராஹிம் மக்கி, எம்.எஸ்.எப் தேசிய பொதுச்செயலாளர் எஸ்.எச். முஹம்மது அர்ஷத், எம்.எஸ்.எப் மாநில பொதுச்செயலாளர் வழக்கறிஞர் ஏ.ஆர்.ஆர். நூர்முஹம்மது, சென்னை வடக்கு மாவட்ட எஸ்.டி.யூ செயலாளர் ஏ.கே. முஹம்மது ரபீ ஆகியோர் உடனிருந்தனர்.

### மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலை –

# மதுரை பழங்காநத்தத்தில் ரயில்வே கடவிற்கு - சாலை மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 30-

நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.499.08 கோடி செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம் - பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம், இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகளை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக 68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில், 16,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டு, 2,130 கி.மீ. முக்கியச் சாலைகள் நான்குவழி மற்றும் இருவழித்தட சாலைகளாக அகலப்படுத்தப்பட்டு, 5,000 கி.மீ.க்கும் அதிகமான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மாவட்ட பிற சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 1500-க்கும் அதிகமான பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் மேம்படுத்தப்பட்ட நான்கு வழிச்சாலை திறந்து வைத்தல்

சென்னை கன்னியாகுமரி தொழில் தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியோடு, நில எடுப்பு, குழாய்களை மாற்றியமைத்தல் மற்றும் பராமரிப்பு உட்பட 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில், நாமக்கல் மாவட்டத்தில், 11.15 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை மற்றும் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலையில், பள்ளிப்பாளையம் நகரின் நெரிசலை குறைத்திடும் வகையில் 3.40 கி.மீ அமைக்கப்பட்டுள்ள இருவழித்தட உயர்மட்ட பாலம் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ - மாணவியர்கள் விரைவாக சென்று வரவும், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டத்தை இணைக்கும் வகையிலும், இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கும் அருகிலுள்ள நகர்புறங்களில் அமைந்துள்ள பிற பகுதிகளுக்கு பொது மக்கள் எளிதாக செல்லவும் இச்சாலையானது வழிவகுக்கிறது. இத்திட்டத்தில், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் தெருவிளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, 7 ஆண்டுகளுக்கான செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்புப் பணியும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

மதுரை மாவட்டம் - பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்

மதுரை மாவட்டத்தில் மதுரை - கன்னியாகுமரி சாலையில் பழங்காநத்தத்தில், மதுரை சந்திப்பு மற்றும் திருப்பரங்குன்றம் இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே கடவு எண் 366-க்கு மாற்றாக

68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 730 மீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மதுரை மாநகரின் மேற்கு பகுதிகளான பழங்காநத்தம், திருப்பரங்குன்றம் மற்றும் காளவாசல் பகுதிகளை மதுரை மாநகரின் கிழக்கு பகுதிகளான டிவிஎஸ் நகர், ஜெய்ஹிந்துபுரம், வில்லாபுரம், அவனியாபுரம், விமான நிலையம் ஆகிய பகுதிகளை இப்பாலம் இணைப்பதால் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், இரயில்வே கடவில் காத்திருக்காமல், காலதாமதமின்றி பயணிக்க இயலும்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் பழங்குடியினரின் மறுகுடியமர்வுக்காக கட்டப்பட்ட குடியிருப்புகளை திறந்து வைத்தல்

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கம் கிராமத்தில் அரக்கோணம் புறவழிச்சாலை அமைக்கும் நேர்பாட்டில் நிலஎடுப்பில் பாதிக்கப்பட்ட

41 இருளர் பழங்குடி குடும்பங்களுக்கு மறுகுடியமர்வு மற்றும் மேம்பாட்டிற்காக 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பழங்குடியின மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

இந்த மறுகுடியமர்வு திட்டத்தில் 41 குடியிருப்புகள், அங்கன்வாடி மையம், சமுதாயகூடம், கோவில், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு திடல், குடிநீர் மற்றும் மின்சாரம் வசதி போன்ற அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சுகாதாரமான சூழல், சமூக நிலைத்தன்மை மற்றும் சீரான வாழக்கை முறையை அம்மக்கள் அடைவர்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர்தெ. பாஸ்கர பாண்டியன், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா. செல்வதுரை, நபார்டு மற்றும் கிராம சாலைகள் தலைமை பொறியாளர் ப.செந்தில் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் 102-ஆவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாட முடிவு!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மே 30-

சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாட மாவட்டக் கழகம் தீர்மானித்துள்ளது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (29.05.25, வியாழன்) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன், ஜோசப்சாமுவேல், பா.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், கே.எஸ்.எம்.நாதன், எஸ். மணிமுடி, எம்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, வே.உமாகாந்தன், மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத். பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டிஎஸ். பி..ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பொறுப்பாளர்கள்: இரா.விடுதலை, என்.கிருஷ்ணமூர்த்தி, ஒ.ஏ.நாகலிங்கம், பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், பி.எம்.யாழினி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், க. வினோத், ஜெ.பாலமுருகன், எஸ்.தனசேகர், சங்கர் நானா, எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம். பிரோஸ்கான், பி. விஜயகுமார், இரா.வீரமணி, மா. அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மூத்த குடிமக்களுக்காக உறைவிடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டல், மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்காவை திறந்து வைத்தல், கொளத்தூர் தொகுதியைச் சார்ந்த பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், அனிதா அகாடமி மாணவர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் மடிக்கணினி வழங்கல், கண் பரிசோதனை செய்தவர்களுக்கு கண்ணாடி வழங்குதல் என பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், திறந்து வைக்கவும், நலத்திட்ட உதவிகள் வழங்கவும் வருகை தந்து சிறப்பித்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

பள்ளியில் படிக்கும் 14 வயதில் ஒரு இனத்தை காப்பதற்காக ஒரு இனத்தினுடைய மொழியை காப்பதற்காக ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள் நீ தேடி வந்த கோழையுள்ள நாடி தல்லவே என போர்ப் பரணி பாடி பொது வாழ்க்கைக்கு வந்து பெரியாரின் சீடனாய், அண்ணாவின் தம்பியாய் கழகத்தில் இணைத்துக் கொண்டு

தமிழர்களின் உரிமைக்காக, சுயமரியாதை சிந்தனையோடு தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, மாநில சுயாட்சி, சமூக நீதி, சமத்துவம், பெண்ணுரிமை ஆகியவைகளை காத்திட அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூகத்தில் பின்தங்கியவர்கள், மாற்றுத்திறனாளிகள் சமூகத்தால் ஒடுக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அனைவரையும் பாதுகாக்கும் பாதுகாவலராக இயக்கத்தின் கருவாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளான ஜூன் 3-ம் நாளை சீரும் சிறப்புமாக எழுச்சியோடு கொண்டாட முடிவெடுத்தும்

ஜூன் 1 அன்று மதுரை மாநகரில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

### ‘ஆபத்துகளை அண்ட விடாமல் காக்கிறார் திராவிட மாடல் முதல்வர்!’

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு!

சென்னை, மே 30-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப் பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.



இதில் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கோடை விடுமுறையைப் பயனுள்ளதாக்கும் வகையில் கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 29.05.2025 அன்று 62 (அ) - வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் ரூ.கீர்த்தனா கலந்து கொண்டு, “விஸ்வகர்மா என்ற பெயரில் ஒன்றிய அரசு மீண்டும் குலக்கல்வியைப் புகுத்தப் பார்க்கிறது. புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் 3, 5, 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வைத்து, நமது மாணவர்களை கல்வியில் இருந்து வெளியேற்றத் துடிக்கிறது. ஒரு நூற்றாண்டு காலமாக நமது திராவிட இயக்கத் தலைவர்கள் போராடிப் பெற்றுத் தந்தை கல்வி உரிமைகளை ஒவ்வொன்றாக சிதைந்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் இந்த ஆபத்துகள் எதுவும் தமிழ் நாட்டை அண்ட விடாமல் காத்து வருகிறார் நமது திராவிட மாடல் முதல்வர்” என கல்வி தொடர்பாக பல் வேறு செய்திகளை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

மேலும், பெண் ஏன் அடிமையானாள்?, திராவிடப் பள்ளி வெளியிட்ட ‘புதிய கல்விக் கொள்கை ஒரு பார்வை’, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் ‘திராவிட இயக்க வரலாறு’ உள்ளிட்ட நூல்களில் உள்ள சுவாரஷ்யமான செய்திகளை மாணவர்களுக்கு எடுத்துச்சொல்லி, அவர்களை வாசிக்க ஊக்கப்படுத்தினார். நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்ற மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘திராவிடத்தால் வாழ்கிறோம் நூல் வழங்கப்பட்டது.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ்,பகுதி அமைப்பாளர் ஜி.ஜெ.கிரிதரன், பகுதி துணை அமைப்பாளர்கள் விக்னேஷ், புருஷோத்தமன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை !

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் !

### பகுதிக் கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கை!

சென்னை மே: 30

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்¬பில் பகுதி அவைத் தலை¬வர் ப. காளேஸ்வரன் தலைமையில்,6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,பகுதி துணை செயலாளர் என்.பன்னீர்செல்வம், பா. கவிதா,துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன் ,என்.கே. ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு,ரா.கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பம்மல் எல்.சி. மஹால் திருமண மண்டபத்தில் இன்று (30-05-2025 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு பம்மல் தெற்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி எம். எல்.ஏ,மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ,

தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.க. வசந்தகுமாரி,துணை மேயர் கோ. காமராஜ், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது ,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே. ஏ.சத்தியபிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா. செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பி.எஸ்.ரவி,வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், மு. இன்பசேகர்,என். காந்தி, முகமது அப்பாஸ், எம். சுகுமாரன்,பி. ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் ஏ. மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள்(BLA2), கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: வாக்குச் சாவடி பாக பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 31 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா.

ஜூன் 18 முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம். கழக ஆக்கப் பணி.

இவ்வாறு பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர்,மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.